திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரியை ரத்து செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் அங்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

DR. H. V. HANDE: Sir, we get a number of complaints that cycles which are taken to Thiruvottiyur are taxed, but they are not taxed in Madras City. Will the Government see that cycles that are taken from Madras City to Thiruvottiyur are not caught by the police at the border and trouble given to cyclists avoided? Will Government give clear instructions that these cycles going from the City should be given relief and no harassment should be given to these cyclists?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதைச் செய்ய முடியாது. சென்னை நகரில் சைக்கிள் வரி இல்லை என்று வைத்திருக்கிறார்கள். திருவொற்றியூரில் சைக்கிள் வரி வைத்திருக்கிறார்கள். எனவே, அங்கு செல்லக்கூடிய சைக்கிள்களுக்கு வரி வசூலிக்கிறார்கள். சட்டப்படி அவர்கள் வசூல் செய்யலாம். அதைத் தடுக்க முடியாது. ஆகவே, சென்னை நகரைவிட்டு திருவொற்றியூருக்குள் சைக்கிளில் செல்லக்கூடியவர்கள் லைசென்ஸ் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அங்கு போகக் கூடாது.

* 899 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் சைக்கிள் வரியை ரத்து செய்ய அனுமதிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சைக்கிள் ஏழைகள் வாகனம். மதுரை போன்ற பெரிய நகரங்களில் சைக்கிள் வரி விதிப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சைக்கிள் வரி விதிக்காமலிருக்கத் தீர்மானம் போட்டு அனுப்பினால் அனுமதி அளிக்கப்படும் என்றும் சொன்னார்கள். வந்தவாசி பேரூராட்சியில் சைக்கிள் வரி விதிப்புக்கு விலக்களிக்க வேண்டுமென்று பலமுறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும்,

1972 ஏப்ரல் 6]

அதற்கு அனுமதி அளிக்கப்படவில்லே. சைக்கிள் ஏழைகளின் வாகனமாக இருப்பதால், இனிமேலாவது வந்தவாசி பேரூராட்சிக்கு வரி விதிப்பில் விலக்களிக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரிய நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த வரியை ரத்து செய்து தீர்மானம் போட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால் அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் இதுவரை வரி விலக்கு அளிக்கப்படவில்லே. பேரூராட்சிகளுக்கு இந்த வருமானம் இல்லாமல் சமாளிக்கக்கூடிய நிலே ஏற்படுமானுல், அதற்குப் பின்னுல் இம்மாதிரி தீர்மானம் போட்டு அனுப்பினுல், அதுபற்றி பரிசிலித்து தக்க நடவடிக்கை மேற் கொள்ளலாம்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether it is possible for the Government to have at least some rule passed for the belt areas like Ambattur and Thiruvotriyur where thousands of cyclists are going from Madras daily. A number of representations have been given to me and I have passed them on to the Government. A lot of harassment is being made by the police constables there. Therefore, may I know whether it is possible for the Government to view this serious problem on a different footing and do something in the matter?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது அரசாங்கமே முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்று அல்ல. திருவொற்றியூருக்கு தினந்தோறும் போகிற சைக்கிள்களாக இருந்தால் அங்கு விதிக்கப்படுகிற வரியைக் கட்டி லேசென்சு பெற்றுத்தான் ஆக வேண்டும். சென்னையில் இருந்து போகும் வண்டிகளுக்கு வாங்காதீர்கள் என்பது லோகல் பீப்பிளோடு பாரபட்சம் காட்டுவதாக ஆகும். ஆகவே அந்த முனிசிபாலிட்டியில் வற்புறுத்தி அங்கும் அதை ரத்து செய்யத்தான் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. அ. தேவேந்திரன் : அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது சென்னே நகராட்சியில் தீர்மானம் போட்டு அதை ரத்து செய்திருக்கிறுர்கள் என்றுர். மாயூரம் நகராட்சி மன்றத்திலும் சைக்கிள், மாட்டு வண்டிகள் மீது போடப் படுகிற வரியை ரத்து செய்யவேண்டும் என்று கடந்த பல வருஷங்களாகவே தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பி வருகிறுர்கள். அங்கும் அப்படி ரத்து செய்வதற்கு அரசு அனுமதி கொடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த அந்த நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் வரியை ரத்து செய்ய வேண்டும் என்கிற போது அதனுல் இழப்பு ஏற்படக் கூடியதை சமாளித்துக் கொள்ளும் அளவுக்கு அவற்றுக்கு வருமானம் இருக்கிறதா என்பது தனியாகப் பரிசிலிக்கப்பட்டே நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 900 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி எண் 901.

வணிக வரி மூலம் வருவாய்.

***901 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(இ) 1971-72- அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1,261.33 லட்சமாகும்.

(இ) 1971-72-ல் பிப்ரவரி திங்கள் 29-ம் நாள் முடிய அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் ரூ. 9,601.04 லட்சமாகும்.

DR. H. V. HANDE : Sir, do the Government think that this is a fabulously huge amount that they have collected, eight times the amount they collected in 1956–57, and if so, whether it is possible for them to see that the sales tax does not go on increasing at geometrical progression in the years to come and also whether it is possible for them to fix some sort of ceiling so that this particular source of revenue is not unduly tapped and persons are put to a lot of harassment?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். வருமான வரி இலாக்கா மக்களைக் கசக்கிப் பிழிவதனுலும், அதிகமான அளவுக்கு வரியை உயர்த்திக் கொண்டு போவதனுலும் இந்த வருமானம் உயரவில்லை. நாட்டில் உற்பத்தி பெருகி, பலவகையிலும் மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்து, வியாபாரம் பெருகி இருப்பதன் காரணத்தினுல்தான் வருமானம் பெருகியிருக்கிறது என்பது